பணியாற்றி கொண்டிருக்கின்றார்கள். அந்தக் கழகத்தை மேலும் அபிவிருத்திபடுத்துவதற்கு, இரப்பர் வாரியத்தில் இன்று ஒரு ஆராய்ச்சி நிலையத்தை ஏற்படுத்துவதற்கு தமிழக அரசிடம் 100 ஏக்கர் இடத்தை கேட்டிருப்பதாகத் தெரிகிறது. அந்த முறையிலே அவர்களுக்கு 100 ஏக்கர் நிலத்தை இந்த அரசு வழங்கி, மேலும் இந்த இரப்பர் கழகத்தை நல்ல ஒரு தொழில் ஸ்தாபனமாக மாற்றி, மேலும் அதிகமான மக்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்குவதற்கான நடவடிக்கைகளை இந்த அரசு எடுக்குமா, அதற்கான திட்டம் அரசிடம் பரிசீலனையில் இருக்கிறதா என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த காலங்களில் நட்டத்தில் இயங்கி வந்த அரசு இரப்பர் கழகம் இதயதெய்வம் தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களுடைய சீர்திருத்த நடவடிக்கையால் கடந்த மூன்று ஆண்டுகளாகத் தொடர்ந்து இலாபத்தில் இயங்கி வருகிறது. மேலும், இந்த அரசு இரப்பர் கழகம் அம்மா அவர்களுடைய ஆலோசனையின் பேரில் நல்லவிதமாகச் செயல்பட்டு வருவதன் பயனாக இன்றைக்குத் தொழிலாளர்கள் எந்தப் பிரச்சினையும் இல்லாமல் அங்கே பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று, சரியான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 15, திரு. கே.கே. சிவசாமி, மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்.

15—

பல்தொழில்நுட்பப் பயிலகம்

***7332—திரு. கே.கே. சிவசாமி:**

மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை தொகுதி, நரிக்குடி ஒன்றியத்தில், பல்தொழில்நுட்பப் பயிலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2005 செப்டம்பர் 22]

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை தொகுதி, நரிக்குடி ஒன்றியத்தில், புதிய பல்தொழில்நுட்பப் பயிலகம் ஆரம்பிக்கும் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

திரு. கே.கே. சிவசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைவரும் கல்வியறிவு பெற வேண்டும் என்பதற்காகப் பள்ளி மாணவ மாணவியர்க்கு, இலவசப் பாடப் புத்தகங்கள் வழங்கி, கல்விக் கண் திறந்தவர் மாண்புமிகு அம்மா அவர்கள். அருப்புக்கோட்டை தொகுதி, நரிக்குடி ஒன்றியம், மிகவும் பின்தங்கிய பகுதியாகும்; அங்கே தொழில் வளம் இல்லாத காரணத்தால், சுயமாகத் தொழில் செய்கின்ற வாய்ப்பைப் பெறுவதற்கு அடித்தளமாகப் பல்தொழில்நுட்பப் பயிலகம் ஒன்றை அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து, அதற்கு ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு பல்தொழில்நுட்பப் பயிலகம் ஆரம்பிக்க வேண்டுமென்றால், நில மதிப்பு நீங்கலாக, ரூபாய் 10 கோடி செலவாகிறது. அதுமட்டுமல்லாமல், மாண்புமிகு உறுப்பினர் கேட்கின்ற விருதுநகர் மாவட்டத்திலே, 4 அரசு உதவி புரிகின்ற பல்தொழில்நுட்பப் பயிலகங்களும், 5 சுய நிதி அடிப்படையிலே செயல்படுகின்ற பல்தொழில்நுட்பப் பயிலகங்களும் செயல்பட்டு வருகின்றன. அந்த 9 பல்தொழில்நுட்பப் பயிலகங்களிலே, 2,750 மாணவர்களைச் சேர்ப்பதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டிருக்கிறது. கடந்த ஆண்டில், அந்த 2,750 மாணவர்களிலே, 2,132 மாணவர்கள்தான் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். காலியாக உள்ள இடங்களிலே சேர்ப்பதற்கு, 618 மாணவர்கள் இருந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே, புதிதாகப் பல்தொழில்நுட்பப் பயிலகம் ஆரம்பிக்கும் செயற்குறிப்பு ஏதும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 16, திரு. ராதாரவி, மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்.